# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 27.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- கோவை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் ஒரு பகுதியாக, கோவையில் உள்ள **வ.உ.சி மைதானத்தில் வை-பை(Wi-Fi)** வசதியுடன் கூடிய செயற்கை மரம் அமைக்கப்பட்டுள்ளது.
  - இதற்கு தங்க மரம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இம்மரத்தைச் சுற்றி சுமார் **400மீ** சுற்றளவிற்கு இலவச வை-பை கிடைக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது.
- **குறிப்பு**
  - **ஸ்மார்ட் சிட்டி மிஷன் (Smart City Mission)** என்னும் திட்டம் 2015ம் ஆண்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.
  - இத்திட்டத்தின் மூலம் இந்தியாவில் மொத்தம் 100 நகரங்களை தேர்வு செய்து அந்நகரங்களின் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப வசதியை மேம்படுத்துகிறது.
  - 100வது ஸ்மார்ட் சிட்டியாக **மேகலாயாவின் சில்லாங்** தற்போது தேர்வாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.



## இந்திய நிகழ்வுகள்

- உலகிலேயே மிக உயரமான சிலையாக **சர்தார் வல்லபாய் படேலின் சிலை (182 மீட்டர் உயரம்)** அவரது பிறந்த நாளான அக்டோபர் 31ம் தேதி குஜராத் மாநிலம் **வதோதராவில்**

அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற உள்ளது.

- இச்சிலைக்கு ஒருமைப்பாட்டின் சிலை(**Statue of Unity**) எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- மேலும் இவ்விடத்தில் 52 அறைகள் கொண்ட 'ஸ்ரேஸ்த பாரத் பவன்' என்ற கட்டிடமும் அமைய உள்ளது.




- சிறந்த மகளிர் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையுடன் இணைந்து மகளிர் தொழில் முனைவோர் சங்கம் நடத்திய 2018ம் ஆண்டிற்கான '**மகளிர் தொழில்முனைவோர் மாநாடு'** (**Women Entrepreneurship Summit - 2018**) **புது டெல்லியில்** ஆகஸ்ட் 25 அன்று நடைபெற்றது.




- இந்தியாவில் தோன்றிய யோகா-வை உலகறியச் செய்யும் பொருட்டு, தமிழகத்தில் உள்ள மாமல்லபுரத்தில் **உலக யோகா திருவிழா 2018** தொடங்கியுள்ளது. இத்திருவிழா தமிழக சுற்றுலாத் துறையால் நடத்தப்படுகிறது.
  - இதில் இந்தியா, தாய்லாந்து, இலங்கை, சீனா, ஹாங்காங் நாட்டு யோகா கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

We Shine Academy TM




**விளையாட்டு நிகழ்வுகள்**

- இந்தோனேசியாவில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டியில், ஆண்கள் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் **முகமது அனாஸ்** வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.
  - இதேபோல் பெண்கள் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் **ஹிமா தாஸ் வெள்ளிப்** பதக்கம் வென்றுள்ளார்.




- பெல்ஜியம் நாட்டின் ஸ்டேவ்லெட் நகரில் நடைபெற்ற 11வது கிராண்ட் பிரிக்ஸ் கார்ப்பந்தயப் போட்டியில் ஜெர்மனி வீரர் செபஸ்டின் வெட்டல் **Sebastian Vettel** சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.
  - **ஹாமில்டன் 2வது இடத்தையும்**, **வெர்ஸ்ட்டாப்பன்** 3வது இடத்தையும் பிடித்துள்ளனர்.




**விருதுகள்**

- ஆசிரியர் தினத்தையொட்டி (செப்டம்பர் 05), மத்திய அரசு சார்பில் சிறந்த ஆசிரியர்களுக்கு **தேசிய நல்லாசிரியர் விருது** வழங்கி கவுரவிக்கப்படுகிறது.
    - தேசிய நல்லாசிரியர் விருதுக்கு கோவை மாவட்டம் மதுக்கரை ஒன்றியம் மலுமிச்சம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை **ஆர்.ஸதி R.Sathy** என்பவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



**நியமனங்கள்**

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை (DRDO – **Defence Research Development Organization**) தலைவராக **சதீஷ் ரெட்டி** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **குறிப்பு**
    - இந்தியாவின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக **1958ம் ஆண்டு**

**DRDO** தொடங்கப்பட்டது.

- இதன் தலைமையம் **புதுடெல்லியில்** உள்ளது.



- சிக்கிம் மாநிலத்தின் 16வது ஆளுநராக பீகாரைச் சேர்ந்த **கங்கா பிரசாத்** மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **குறிப்பு**
    - சிக்கிம் மாநிலமானது இந்தியாவின் **22வது மாநிலமாக 16 மே 1975ல் 36வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1975ன்** படி இணைத்துக் கொள்ளப்பட்டது.



**வர்த்தக நிகழ்வுகள்**

- உலக வங்கியானது முதல் பொதுவான சங்கிலித் தொடர் பத்திரமான ஐ - பத்திரத்தை (**Bond - I**) உருவாக்கியுள்ளது.
    - **Bond – I** என்பது சங்கிலித் தொடரால் வழங்கப்படும் புதிய கடன் கருவியின் (**Block Chain Offered New Debt Instrument**) சுருக்கமாகும்.
    - ஐ – பத்திரமானது ஆஸ்திரேலியாவின் டாலர்களில் குறிக்கப்படும் ஈத்தேரியம் சங்கிலித் தொடர் பத்திரமாகும்.

- இந்த பத்திரத்திலிருந்து கிடைக்கும் நிதிகள் நிலையான அபிவிருத்தி முயற்சிகளுக்குச் **(SDI – Sustainable Development Initiative**)-க்கு செலவிடப்படும்.




We Shine Academy™